**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**OS.No.21/2020 – PW-2**

| | |
|---|---|
| Name | திருமதி.பவானி |
| Husband Name | திரு.பழனி |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **09.03.2026.**

**5–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–**

சுரேஷ் என்பவர் யார் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு விவரம் எனக்கு தெரியுமா என்றால் என் அண்ணன் மகன் ஈஸ்வரன் வங்கியில் கடன் வாங்கி பின்னர் கடனை திரும்ப செலுத்தாததால் வழக்கு சொத்து ஏலத்திற்கு போனதாக என் அண்ணன் சொன்னார். என் அண்ணன் சொல்லி தான் அந்த விவரங்கள் தெரியும். எனக்கு நேரடியாக தெரியாது. என் அண்ணன் மகன் வேலூரில் உள்ள கார்பரேஷன் வங்கியில் கடன் வாங்கியிருந்ததாக என் அண்ணன் என்னிடம் சொன்னார். என் அண்ணன் மகன் எந்த தேதியில் எவ்வளவு கடன் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. என் அண்ணன் மகன் வங்கியில் கடன் வாங்கியிருந்த விவரம் என் அண்ணனுக்கு வங்கி அதிகாரிகள் வழக்கு சொத்திற்கு சீல் வைத்த போது தான் தெரிய வந்தது. அந்த வீட்டில் என் அண்ணனும், என் அண்ணன் மகனும் ஒன்றாக தான் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். அந்த கடன் சம்மந்தமாக வங்கியிலிருந்து அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்று எனக்கு தெரியாது. என் அண்ணன் மகன் தற்போது எங்கு இருக்கிறார் என்று எனக்கு தெரியாது. எனக்கு வழக்கு விவரம் தெரியாமல் என் அண்ணனுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:–** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.